## தலைப்பு 279 – கேகாலை மாவட்ட செயலகம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் 2017 ஆம் ஆண்டிற்கான அறிக்கை

---

2017 இன் 32 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்திய) அதிகாரச்சட்டத்தின் மூலம் திருத்தப்பட்ட 2016 இன் 24 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் முதலாவது பட்டோலையிலும் இரண்டாவது பட்டோலையிலும் குறிப்பிடப்பட்ட தலைப்பு மற்றும் விடய இலக்கத்தின் கீழ் ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக்கூற்று என்பன கேகாலை மாவட்ட செயலகத்தால் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டன. அக்கணக்குகளிலும் இணக்கக்கூற்றுக்களிலும் காட்டப்பட்டுள்ள நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன.

### 1.2 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும், கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் நிதி முகாமைத்துவம் மற்றும் கணக்களிதன்மை தொடர்பான பொறுப்பு

---

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 124 இன் பிரகாரம் அரசின் பண உழைப்பு மற்றும் அரசிற்கு கிடைக்க வேண்டிய பணத்தை சேகரித்தல் உட்பட அரசின் சகல நிதி நடவடிக்கைகளையும் மேற்பார்வை தொடர்பாக பொது அதிகாரம் நிதி அமைச்சருக்கு கையளிக்கப்பட்டுள்ளது. நிதி அமைச்சரால் அப்பொறுப்புக்களை நிறைவேற்றும் பொருட்டு நிதிப்பிரமாணம் 124(2) பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளார். நிதிப்பிரமாணம் 125(1)(அ) பிரகாரம் திணைக்களத் தலைவர் தனது திணைக்களத்தின் சகல பணக்கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தராக இருப்பதுடன் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தர் திறைசேரியால் நியமிக்கப்பட்டுள்ளார். பாராளுமன்றத்தால் விதிக்கப்படும் வரையரைகளுக்குள்ளே தமது கடமைகளை நிறைவேற்றி சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

### 1.3 கணக்காய்வில் நோக்கெல்லை

---

தலைப்பு 279 – கேகாலை மாவட்ட செயலகத்தின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் தொடர்பாக திட்டமிடல், அரச செலவினங்கள், அரச வருமானங்கள், மனித மற்றும் பௌதீக வள முகாமைத்துவம், உள்ளக கட்டுப்பாட்டு ஏற்பாடுகளைப் பயன்படுத்துதல், சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்குதல் மற்றும் புத்தகங்கள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களை நாளதுவரையாக பேணுதல், கணக்குகளைத் தயாரித்து உரிய காலப்பகுதியில் சமர்ப்பித்தல், செயலாற்றல் குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்டு தரப்பினருக்கு இடையே செயலாற்றல் அறிக்கைகளை விநியோகித்தல் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2018 யூலை 20 ஆந் திகதி மாவட்ட செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட திட்டங்கள், கணக்குகள், இணக்கக் கூற்றுக்கள் மற்றும் செயலாற்றல் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

## 1.4 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக கேகாலை மாவட்ட செயலகத்தில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் மேற்படி 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் விரிவாக காண்பிக்கப்பட்டுள்ளன. அந்த அவதானிப்புகளிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள் இந்த அறிக்கையின் 2.1 ஆம் பந்தி முதல் 2.11 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. நிதி நிர்வாகத்தின் போதுமானதன்மை உறுதிப்படுத்தப்படும் வகையில் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 128 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க கணக்கீட்டு உத்தியோகத்தராக தமது கணக்களிப் பொறுப்பை நிறைவேற்றுகையில் வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் பின்வரும் குறிப்பில் பொழிப்பாக்கப்பட்டு காண்பிக்கப்பட்டுள்ளன.

| **நிதிப்பிரமாணம் 128 – கணக்கீட்டு உத்தியோகத்தரின் கணக்களிதகைமை** | | **கணக்கீட்டு உத்தியோகத்தர் இந்த ஒழுங்குவிதிகளுடன் இணங்கி நடக்காமை** | | **அவதானிப்புக்கள் உள்ளடக்கப்பட்ட அறிக்கையின் பந்திக்கான தொடர்பு** |
|---|---|---|---|---|
| **நிதிப்பிரமாணம்** | | | | |
| 128(1)(அ) | அரசாங்கத்தால் நிர்ணயிக்கப்பட்டு காட்டப்பட்டுள்ள கொள்கைகள் மற்றும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ள நடவடிக்கைகளுக்காக நிதி ஏற்பாடுகளை வழங்கி கொடுப்பதில் பாராளுமன்றத்தின் சவால்களைக் கவனத்தில் கொண்டு தமது திணைக்களத்தின் நடவடிக்கைகளை வெளிப்படைத் தன்மையுடன் திட்டமிட்டு செயற்படுத்துவதற்கும் மற்றும் நடப்பாண்டிற்காக நிர்ணயிக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களை பூரணப்படுத்துவதற்கு மற்றும் / அல்லது நிர்ணயித்த இலக்குகளை நிறைவேற்றுவதற்கு முயற்சிகள் எடுத்தல் | 1. | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை நிறைவேற்றுவதற்கான முன்னாயத்தம் | 2.1.1 |
| | | 2. | செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட பணிப்பொறுப்புக்களை நிறைவேற்றாமை. | 2.1.2(அ) |
| | | 3. | எதிர்பார்க்கப்பட்ட அடைவு மட்டத்தினை பெற்றுக்கொள்ளாமை | 2.1.2(ஆ) |
| | | 4. | செயற்திட்டங்களை பூர்த்தி செய்யாது கைவிட்டு விடல் | 2.1.2.(இ) |
| 128(1)(ஆ) | தமது திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்கும் கணக்கீட்டு முறைக்குமுள்ள ஒழுங்குகள் வெற்றிகரமாகவும் தேவையான சந்தர்ப்பங்களில் அரசிற்கு கிடைக்க வேண்டிய கட்டணங்களை ஒழுங்காக உறுதிப்படுத்துவதற்கும் அவற்றை | | செயற்திட்டங்களை பூர்த்தி செய்யாது கைவிடல் | 2.1.2(இ) |

| | | | |
|---|---|---|---|
| | முறையாகவும் முழுமையாகவும் உடனடியாக சேகரிப்பதற்கும் கிடைக்கப்பெறும் பணத்தை கணக்கு வைப்பதற்கும் அரசிற்காக பொறுப்புக்களில் கடப்பாடுகளுக்காக அதிகாரமளிப்பதற்கும் நிறைவேற்றப்பட்ட சேவைகள் வழங்குதல் கண்காணிப்பு மற்றும் பரீட்சிப்பதற்கும் அந்த அரசின் நிதியிலிருந்து அற்காக உடனடியாகவும் தாமதமின்றியும் சரியாக கொடுப்பனவு செய்வதற்கும் அதற்கு போதியளவு ஏற்பாடுகள் செய்யப்படுகின்றதெனவும் | | |
| 128(1)(இ) | நிதிப்பிரமாணம் மற்றும் அரசாங்கத்தின் ஏனைய துணை அறிவுறுத்தல்கள் தமது திணைக்களத்தில் பின்பற்றப்படுகின்றன என்பதும் தேவையான சந்தர்ப்பங்களில் அவற்றிற்கு மேலதிகமாக திணைக்கள அறிவுறுத்தல்கள் வழங்கப்படுகின்றன என்பதும் | இணக்கமின்மைகள் | 2.10 |
| 128(1)(உ) | அரசாங்கத்திற்குச் சொந்தமான அல்லது அரசின் கட்டுக்கோப்பில் காணப்படும் பணம், பொருட்கள் உபகரணங்கள் மற்றும் ஏனைய சொத்துக்களை பாதுகாப்பாக வைத்திருத்தல் மற்றும் பாதுகாப்பதற்காக போதியளவிலும் முறையாகவும் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதாகவும் அவை காலத்திற்குக் காலம் சரி பார்க்கப்படுகின்றதெனவும் அவற்றை தீர்வுசெய்யும் போது அவ்வாறு தீர்வுசெய்தல் உரிய ஒழுங்கு விதிகளுக்கும் அறிவுறுத்தல்களுக்கும் இணங்க உள்ளன எனவும் | 1. சொத்துக்களின் முகாமைத்துவத்திலான குறைபாடுகள்<br>2. வாகனப் பயன்பாடு<br>3. விளைவற்ற மற்றும் குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்<br>4. ஏனைய நிறுவனங்களுக்கு சொந்தமான சொத்துக்களின் முறையற்ற பாவனை | 2.3<br>2.3(அ)<br>2.3(ஆ)<br>2.3(இ) |
| 128(1)(ஊ) | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் அல்லது திறைசேரியால் கேட்கப்படுகின்ற தகவல்கள், கூற்றுக்கள் சரியான காலநேரத்தில் சமர்ப்பிக்கப்படுவதாகவும் | 1. பெறுகை நடைமுறையை அமல்படுத்தல்<br>2. கட்டுநிதி மதிப்பீட்டை தயாரிப்பதிலான குறைபாடுகள் | 2.2<br>2.8 |
| 128(1)(எ) | நிலுவையாகக் காணப்பட்ட | அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான | 2.7 |

| | | | |
|---|---|---|---|
| | கட்டணங்கள் முதலியவற்றை அறவீடு செய்வதற்கு விசேட ஒழுங்கு விதிகளைப் பயன்படுத்துவதற்கு மற்றும் அந்த நடவடிக்கைகள் ஒப்படைக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களால் நிலுவைப் பணம் தொடர்பாக அவற்றினை அறவீடு செய்வதனைத் துரிதப்படுத்துவதற்கு எடுக்கப்படுகின்ற முயற்சிகள் தொடர்பாக ஆகக் குறைந்தது மூன்று மாதங்களுக்கு ஒரு தடவை அல்லது ஏனைய தரப்பினர்களால் பணிக்கப்பட்டவாறு தமக்கு அறிக்கையிடுதல் | முற்பணக் கணக்கின் நிலுவைக்கடன் மீதிகளை அறவிடல் | |
| 128(1)(ஐ) | அரசின் அலுவல்களை நிறைவேற்றும் போது எதிர்பார்க்கப்பட்ட சிக்கனம், செயற்திறன், ஒழுக்கமுடைமை, நேர்மை போன்ற விடயங்களுக்கு உரிய மதிப்பினை வழங்கி தமது திணைக்களத்தின் முயற்சிகள் செய்யப்படுவதெனவும் | 1. செயற்திட்டங்களைப் பூர்த்தி செய்யாது கைவிட்டுவிடல்<br>2. முகாமைத்துவக் குறைப்பாடுகள் | 2.1.2.(இ)<br>2.5 |
| 128(1)(க) | கணக்கீட்டு உத்தியோகத்தராகப் பொறுப்பேற்றிருக்கும் செலவுத்தலைப்பின் ஒவ்வொரு நிகழ்ச்சித்திட்டம் சம்பந்தமாக நிதியாண்டு முடிவில் ஓர் ஒதுக்கீட்டுக் கணக்கு, பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்குச் சமர்ப்பிக்கப்படுகின்றது. எனவும், (நி.பி.150 ஐப் பார்க்க) | ஒதுக்கீட்டுக் கணக்கில் குறிப்பிடப்பட்ட குறைபாடுகள் | 2.6(ஆ) |
| 128(1)(ச) | உத்தியோகத்தர்களின் / ஊழியர்களின் தாமதம், கவனயீனம், தவறுகள் அல்லது மோசடியால் அரசிற்கு நட்டம் ஏற்பட்ட சந்தர்ப்பங்களில் நிதிப் பிரமாணம் 103 முதல் 108 வரையான பிரமாணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளை கணக்கீட்டு உத்தியோகத்தர்களினால் பின்பற்றப்பட்டதாகவும், நிதிப் பிரமாணம் 156(1) இன் பிரகாரம் அந்நட்டங்கள் தொடர்பாக பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்கள் / ஊழியர்கள் பேரில் மிகை கட்டணங்கள் விதிக்கப்படுமெனவும் | ஏனைய நிறுவனங்களுக்கு சொந்தமான சொத்துக்களின் முறையற்ற பாவனை | 2.3(இ) |

## 2. பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 2.1 செயலாற்றல்

#### 2.1.1 திட்டமிடல்

**நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்துகொள்வதற்கான முன்னேற்பாடு**

ஐக்கிய நாடுகள் அமைப்பின் ''நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் 2030'' இன் பிரகாரம் மாவட்ட செயலகத்திற்குரிய நோக்கங்கள் மற்றும் இலக்குகள் இனங்காணப்பட்டிருந்ததுடன், அந்த நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு தேவையான செயற்பாடுகள் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

#### 2.1.2 கடமைப் பொறுப்புக்களை நிறைவேற்றாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள கடமைப் பொறுப்புகள் நிறைவேற்றப்படாமை**

வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கமைய மாவட்டச் செயலகத்தின் சமூக அபிவிருத்திப் பிரிவின் கீழான விவசாயப் பிரிவினால் நடைமுறைப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ள வணிக பழங்கள் கிராமிய நிகழ்ச்சித்திட்டம் மற்றும் குரங்குகளினால் பயிர்ச்செய்கைக்கு ஏற்படும் சேதத்தினை தடுப்பதற்கான செயற்திட்டம் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) எதிர்பார்க்கப்பட்ட அடைவு மட்டத்தினை பெற்றுக்கொள்ளாமை**

ஆரம்பக் கைத்தொழில் அமைச்சின் நிதியேற்பாட்டின் அடிப்படையில் ரம்புக்கன பிரதேச செயலாளர் பிரிவில் ரூபா 3,409,575 தொகை செலவிடப்பட்டு அமுல்படுத்தப்பட்ட தஹம்பிலியாகொட மட்பாண்டக் கைத்தொழில் கிராமச் செயற்திட்டத்திற்காக வழங்கப்பட்டிருந்த மண் குழைக்கும் இயந்திரம் விளைவுள்ள விதத்தில் நிறுவப்படாமை, இயந்திரத்தின் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பிற்காக முறையான வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்பட்டிராமை, மண் போக்குவரத்து அனுமதிப்பத்திரங்களை பெற்றுக்கொள்வதிலான சிக்கல்கள் மற்றும் வேலைத்தளங்களில் வசதிகளை ஏற்படுத்திக்கொள்வதிலான பொருளாதார பின்னடைவுகள் போன்ற சிக்கல்களுக்காக முறையான வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்பட்டிராமையால் செயற்திட்டத்தின் **விளைதிறன்** குறைவான மட்டத்தில் காணப்பட்டது.

**(இ) செயற்திட்டங்களை நிறைவு செய்யாது கைவிடல்**

மாவட்டச் செயலகத்தினால் பிரதான பணிப்பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்காக ஆரம்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 6,708.6 மில்லியன் கூட்டுத்தொகையான 77 செயற்திட்டங்கள் உரிய ஒப்பந்ததாரர்களால் செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்ட இடைநடுவில் நிறுத்தப்பட்டிருந்த காரணத்தால் மீளாய்வாண்டின் இறுதியளவில் ரூபா 4,410.55 மில்லியன் கூட்டுத்தொகையான செலவினம் மேற்கொள்ளப்பட்டு அந்த செயற்திட்டம் நிறைவு செய்யப்படாது கைவிடப்பட்டிருந்தது. விபரங்கள் பின்வருமாறு

| செயற்பாட்டு நிறுவனம் | செயற்திட்டங்களின் எண்ணிக்கை | மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் | 2017 திசெம்பர் 31 ஆந் திகதியளவிலான மொத்த செலவினம் |
|---|---|---|---|
| | | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| சப்ரகமுவ மாகாண சபை | 06 | 120.20 | 62.81 |
| மேல் மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை | 13 | 1,100.69 | 676.36 |
| கேகாலை நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகம் | 23 | 2,309.43 | 1,569.01 |
| ரம்புக்கன நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகம் | 12 | 993.38 | 638.46 |
| தெஹியோவிட்ட நிறைவேற்று பொறியியலாளர் அலுவலகம் | 23 | 2,184.90 | 1,463.91 |
| மொத்தம் | **77** | **6,708.60** | **4,410.55** |

## 2.2 பெறுகை நடைமுறையினூடாக வழங்கல் மற்றும் சேவைகளை பெற்றுக்கொள்ளல்

மாவட்ட செயலகத்தினால் அரசாங்க பெறுகைககள் வழிகாட்டிக் கோவைக்கமைய பணிகள் ஆரம்பிக்கப்பட்டு வழங்கல் மற்றும் சேவைகளை பெற்றுக்கொள்ள வேண்டிய ரூபா 68.87 மில்லியனான நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், அவற்றுள் ரூபா 45.33 மில்லியனான நிதியேற்பாடு பயன்படுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அரநாயக்க பிரதேச செயலாளர் பிரிவின் திப்பிட்டிய ராஜகிரிய வித்தியாலயத்தின் முன்புற பக்கச்சுவரினை நிர்மாணிப்பதற்காக மீளாய்வாண்டினுள் ரூபா 1,136,790 தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன், 05 மாதங்களிளான குறுகியக் காலப்பகுதியினுள் 25 மீட்டர்கள் நீளமான பகுதி முழுமையாக உடைந்து வீழ்ந்திருந்தது.

(ஆ) அரநாயக்க பிரதேச செயலாளர் பிரிவின் நாரங்கம்மான வசந்தகம விளையாட்டுத் திடலில் ரூபா 8,492,352 தொகை செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்டிருந்த பக்கச்சுவர் உள்ளடங்கலான பகுதியை உரிய முறையில் மண் இட்டு நிலத்தை பண்படுத்தல் இடம்பெறாமையால் அதற்காக மேற்கொள்ளப்பட்ட செலவினமானது விளைவற்ற செலவினமொன்றாக மாறியிருந்தது.

(இ) 04 பாடசாலைகளின் ரூபா 2,400,000 செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்டிருந்த பக்கச் சுவர்கள் 2018 மே 01 ஆந் திகதி வரையிலும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. ஒரு பாடசாலையின் சல்லடையின் மேல் சுமார் 11 ½ அடி அளவான பகுதியில் சல்லடை இட்டு மூடப்பட்டிருக்கவில்லை.

## 2.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

மாவட்டச் செயலகத்தின் சொத்துக்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

### (அ) வாகனப் பயன்பாடு

மாவட்டச் செயலகங்களுக்கு மீளாய்வாண்டின் இறுதியளவில் பின்வருமாறு 32 வாகனங்கள் காணப்பட்டதுடன், அந்த வாகனங்களில் 462,404 கிலோ மீட்டர்கள் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன், அதற்கான எரிபொருள் மற்றும் உராய்வு நீக்கி எண்ணெய் ஆகியவற்றுக்காக ரூபா 4,745,855 தொகையும் வாகன சேவைப்படுத்தல்களுக்காக ரூபா 1,298,303 தொகையும், வாகனப் பழுதுபார்த்தல்களுக்காக ரூபா 5,201,909 தொகையும் வாகனக் காப்பீட்டிற்காக ரூபா 1,581,524 தொகையுமாக ரூபா 12,827,591 கூட்டுத்தொகை செலவிடப்பட்டிருந்தது. அதற்கமைய மாவட்டச் செயலகத்தினால் வாகனங்களை ஓட்டத்தில் ஈடுபடுத்துவதற்காக சாரதி சம்பளம் மற்றும் படிகள் நீங்கலாக ஒரு கிலோ மீட்டருக்காக ரூபா 27.74 செலவிடப்பட்டிருந்தது.

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i). **எரிபொருள் எரிவு பரிசோதிக்கப்படாமை**

2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 30/2016 ஆம் இலக்க அரச நிர்வாகச் சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்திக்கமைய எந்தவொரு எரிபொருள் பரிசோதனையின் பின்னரும் 12 மாத காலப்பகுதியின் பின்னர் அல்லது 25,000 கிலோ மீட்டர்கள் தூரம் ஓட்டத்தில் ஈடுபடுத்திய பின்னர் அல்லது என்ஜினுடனான பிரதானமான பழுதுபார்த்தலின் பின்னர் அல்லது இக்காரணங்களில் முதலில் ஏற்படும் சந்தர்ப்பத்தின் பின்னர் மீண்டும் எரிபொருள் பரிசோதனையொன்று மேற்கொள்ளப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ள போதிலும், மாவட்டச் செயலகத்திற்குரிய 12 வாகனங்கள் மீளாய்வாண்டிலும் முன்னைய ஆண்டிலும், 04 வாகனங்களின் மீளாய்வாண்டிலும் எரிபொருள் தெரிவுப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ii). உள்நாட்டலுவல்கள் அமைச்சின் 2016 செப்தம்பர் 06 ஆந் திகதிய HAF/ADM/TRANS/MISTRY/2 ஆம் இலக்க கடிதத்தின் மூலம் கோரப்பட்டுள்ளவாறு மாவட்டச் செயலகத்திற்குரிய பழுதுபார்க்கப்பட்ட பயன்படுத்த முடியாத 12 வாகனங்கள் தொடர்பான தகவல்கள் 2016 செப்தம்பர் 22 ஆந் திகதி அமைச்சிற்கு வழங்கப்பட்டதன் பின்னர் இது வரையிலும் அது தொடர்பான எந்தவொரு பின்தொடர் நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(iii). உற்பத்தி வருடம் 1985 ஆம் ஆண்டு முதல் 1999 ஆம் ஆண்டு வரையான 06 வாகனங்களுக்காக 2013 முதல் 2017 ஆம் ஆண்டு வரையிலும் 327,351 கிலோ மீட்டர்கள் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன், மேற்கொள்ளப்பட்ட மொத்த பழுதுபார்த்தல் செலவினம் ரூபா 5,595,465 ஆகும்.

**(ஆ) விளைவற்ற மற்றும் குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்**

புலத்கொஹுபிட்டிய பிரதேச செயலகத்தின் அதிகாரப் பிரதேசத்திற்குரிய மூடப்பட்டிருந்த பாடசாலையின் 05 வாகனங்களில் அமைந்துள்ள 8 ஏக்கர்கள் 36 பேர்ச் பரப்பளவான 3 காணித்துண்டுகள் மற்றும் 1700 கன அடி நீளமான 2 கட்டிடங்கள் 2 வருடங்கள் முதல் 20 வருடங்கள் வரையான காலப்பகுதியினுள் விளைவற்றும் குறைப்பயன்பாட்டுடனும் காணப்பட்டது.

**(இ) ஏனைய நிறுவனங்களுக்கு சொந்தமான சொத்துக்களை முறையற்ற விதத்தில் பயன்படுத்தல்**

பொருளாதார அபிவிருத்தி அமைச்சிடமிருந்து கிடைத்த 02 மோட்டார் வாகனங்கள் மற்றும் பிரதேசத்தின் பொருளாதாரத்தை கட்டியெழுப்பும் செயற்திட்டத்திலிருந்து கிடைத்த வாகனமொன்று உரிய முறையில் சுவீகரிக்கப்படாது 05 வருட காலமாக பயன்படுத்தப்பட்டவாறு இருந்தது.

### 2.4 தீர்க்கப்படாத கணக்காய்வுப் பந்திகள்

மாவட்ட செயலகத்திற்குரிய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்டிருந்த கணக்காய்வுப் பந்திகளில் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகள் சம்பந்தமாக அலுவலகத்தால் சரிசெய்யப்படாத பந்திகளுக்கான தொடர்பு கீழே தரப்படுகின்றன.

| கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கான தொடர்பு | | தொடர்புபட்ட விடயம் |
|---|---|---|
| **ஆண்டு** | **பந்தி இலக்கம்** | |
| 2010 | 4.11 | உடுபமுனுவ தெவனகல வீதியின் நிர்மாணப் பணிக்காக கொடுப்பனவு மேற்கொள்ளும் போது மேற்கொள்ளப்படாத பணிகளுக்காக செலுத்தப்பட்ட ரூபா 315,131 தொகையான கொடுப்பனவுகள் அறவிடப்பட்டிராமை. |
| 2012 | 1.9(ஆ).1 | புதிய மாவட்டச் செயலக அலுவலகக் கட்டிடத்தை நிர்மாணிப்பதற்காக ரூபா 77,119,833 தொகை 2012 மற்றும் 2013 ஆகிய ஆண்டுகளில் செலவிடப்பட்டு மேற்கொள்ளப்பட்ட நிர்மாண நடவடிக்கைகள் இடைநடுவில் நிறுத்தப்பட்டிருந்தன. |
| 2013 | 1.10 | கேகாலை மாவட்டச் செயலகத்திலும் பிரதேச செயலகத்தின் 02 அலுவலகங்களிலும் இடம்பெற்ற ஓய்வூதிய மோசடிக்குரியதாக அரசிற்கு அறவிடப்பட வேண்டியதாக இருந்த ரூபா 16,765,760 தொகையான பணம் 2018 ஆகஸ்ட் வரையிலும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிராமை. |
| 2014 | 3.9(ஈ)iii | துத்திரிப்பிட்டிய பேரூந்துத் தரிப்பிடத்தை நிர்மாணிப்பதற்காக 2014 ஏப்ரல் 02 ஆந் திகதி உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டிருந்ததுடன், ரூபா 9,392,501 தொகை செலவிடப்பட்டு மேற்கொள்ளப்பட்ட நிர்மாண நடவடிக்கைகளும் இடைநடுவில் நிறுத்தப்பட்டிருந்தமை. |

## 2.5 முகாமைத்துவ நலிவுகள்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் பலவீனங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் போது பன்முகப்படுத்தப்பட்ட நிதியேற்பாடுகளான ரூபா 978,297 தொகையை ஈடுபடுத்தி நிறைவேற்றப்பட்ட ருவன்வெல்ல பிரதேச செயலகப் பிரிவின் கெக்குணதெனிய சந்தியிலிருந்து உடத்தலாவ ஊடாக பெதன்கொட வீதியை புனரமைப்பதற்காக செயற்திட்டத்தின் நிர்மாணப் பணிகள் உரிய முறையில் திட்டமிடப்பட்டிராத காரணத்தால் வீதியின் நடுப்பகுதிக்கு மலையின் ஒரு பகுதியிலிருந்து பாயும் நீர், வடிகாலினூடாக வெளியேறும் வாய்க்காலுக்கு அனுப்பப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக வாய்க்காலின் நுழைவாயில் அடைப்புக்குள்ளாகியிருந்தது.

(ஆ) ரம்புக்கன பிரதேச செயலகப் பிரிவில் 2010 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரையிலும் காணிகளை அரசிற்கு கையேற்பதற்காக முன்வைக்கப்பட்ட 06 முன்மொழிவுகளை கைப்பற்றுவதற்கான பணிகள் தாமதிக்கப்பட்டிருந்தது.

(இ) போதைப்பொருள் நிவாரண தேசிய நிகழ்ச்சித் திட்டத்துடன் இணைந்ததாக போதைப்பொருள் நிவாரணம் தொடர்பான தொழில்நுட்ப மற்றும் விஞ்ஞான ரீதியான அறிவுடனான வளப்பங்களிப்பு குழாமொன்று பிரதேச மற்றும் கிராமிய மட்டத்தில் உருவாக்குவதற்காக மீளாய்வாண்டினுள் சனாதிபதி செயலகத்தினால் ரம்புக்கன பிரதேச செயலக அலுவலகத்திற்கு வழங்கப்பட்ட ரூபா 215,250 தொகையான நிதியேற்பாட்டினை பயன்படுத்தி மக்களுக்கு அறவூட்டும் நிகழ்ச்சித்திட்டமொன்று நடாத்தப்பட்டிருந்தது. இந்த நிகழ்ச்சித்திட்டத்திற்குரியதாக நிதியேற்பாடுகளை விடுவிப்பதிலான தாமதங்கள், ஈடுபடுத்தப்பட்ட வளவாளர்களின் பற்றாக்குறை, பாடசாலை மட்டத்தில் அறிவூட்டல் பணிகள் இடம்பெறாமை, உத்தியோகத்தர்கள் மற்றும் போதைப்பொருள் நிவாரணக் குழுவின் நிறைவேற்றுனர்களை ஊக்குவிக்கும் நடவடிக்கைகள் இடம்பெறாமை போன்ற காரணங்களால் நிகழ்ச்சித்திட்டத்தின் உத்தேச பிரதிபலன் அடையப்பட்டிருக்கவில்லை.

(ஈ) யட்டியன்தோட்ட பிரதேச செயலகப் பிரிவின் கித்தள் கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள மக்களின் பொருளாதாரத்தை பயன்படுத்தும் நோக்கில் கிராமிய அலுவல்கள் அமைச்சினால் வழங்கப்பட்டிருந்த ரூபா 1,510,515 தொகையான நிதியேற்பாடுகளில் கித்துள் கைத்தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு தொழில்நுட்ப பயிற்சி மற்றும உபகரணங்கள் வழங்கப்பட்டிருந்த போதிலும், நலனாளிகளுக்கு வழங்கப்பட்டிருந்த உபகரணங்கள் அந்தக் கைத்தொழிலுக்கு பொருத்தமற்றவை என்பதால் சில உபகரணங்கள் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(உ) கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சின் நிதியேற்பாட்டின் கீழ் யட்டியன்தோட்ட பிரதேச செயலகப் பிரிவின் பல்லேகம பிரிவின் தனியார் வீடொன்றில் ஆரம்பிக்கப்பட்டிருந்த சிறு கைத்தொழில் நிகழ்ச்சித்திட்டத்தில் கைத்தொழிற்சாலைகளுக்கு தேவையான 22 தையல் இயந்திரங்கள் அமைச்சினால் நேரடியாக பெண்களுக்கு வழங்கப்பட்டிருந்தது. வழங்கப்பட்டிருந்த உபகரணங்களின் பெறுமதி தொடர்பில் பிரதேச செயலாளர் அலுவலகத்தில் எந்தவொரு தகவலும் இல்லாதிருந்ததுடன், கைத்தொழிற்சாலை பெண்களுடன் உடன்படிக்கை கைச்சாத்திட்டிருக்கவும் இல்லை. மேலும், தற்போது கைத்தொழிற்சாலை நடாத்திச் செல்லப்படும் கட்டிடமானது தொழிற்சாலையை நடாத்திச் செல்ல பொருத்தமற்ற நிலையில் காணப்பட்டது. கைத்தொழிற்சாலையின் உற்பத்தி சந்தைப்படுத்தல், செலவினங்களைத் தீர்ப்பதற்கும் ஊழியர்கள் இல்லாதிருந்தமை போன்ற பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்காதிருந்ததுடன், தொழிற்சாலை தோல்வியடைந்திருந்தது. வழங்கப்பட்ட பெரும்பாலான உபகரணங்கள் விளைவற்றும் காணப்பட்டது.

(ஊ) 2017 ஆம் ஆண்டின் போது தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சின் உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி செய்யும் விசேட நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் யட்டியன்தோட்ட பிரதேச செயலகப் பிரிவின் பேரன்னாவ மற்றும் சீபோத் கிராம சேவகர் பிரிவுகளினுள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள ரூபா 3,951,948 கூட்டுத்தொகையான 02 வீதி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை நிறைவேற்றும் போது வீதியின் கொன்கிறீட் தளத்தின் செரிவானது மதிப்பீட்டிற்கமைய இல்லாதிருந்தமை மற்றும் உடன்படிக்கை கைச்சாத்திடும் போது உரிய விவசாய சங்கங்களுக்கு உப ஒப்பந்தம் வழங்கக்கூடாது என தெரிவித்து கையொப்பமிடப்பட்டிருந்த போதிலும், அதற்கு முரணாக வெளி தரப்பினர் ஒருவருக்கு உப ஒப்பந்தம் கையளிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(எ) தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சின் நிதியேற்பாட்டினூடாக நடைமுறைப்படுத்தப்படும் கிராமிய உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்யும் விசேட நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ரூபா 1,485,000 தொகையான நிதியேற்பாடுகளின் கீழ் நிர்மாணிக்கப்பட்டிருந்த ருவன்வெல்ல பிரதேச செயலக அதிகாரப் பிரதேசத்தின் புலுப்பதெனிய ஒவிட்ட வீதியின் ஆரம்பம் முதல் பின்தங்கிய இடங்களுக்கு கொன்கிறீட் இடும் செயற்திட்டத்திற்குரியதாக வீதியின் மத்தியின் செறிவானது 6 அடிகளாக இருக்க வேண்டிய போதிலும், ஒட்டுமொத்த நீளத்தின் 80 சதவீதத்திற்கும் அதிகமான அளவானது வீதியின் செறிவானது 1 அடியை விட குறைவாக உள்ளபோது மொத்த நிதியேற்பாட்டுத் தொகையில் 70 சதவீதம் செலுத்தப்பட்டிருந்தது.

(ஏ) 2016 ஆம் ஆண்டின் போது மண்சரிவினால் இடம்பெயர்ந்த மக்களை மீளக் குடியேற்றுவதற்காக தெரிவு செய்யப்பட்ட எருகம பாரஓவத்த காணியின் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது வடிகால் கட்டமைப்பினை நிர்மாணிப்பதற்காக ரூபா 3,349,132 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும், அது உரிய நியமத்திற்கமைய நிர்மாணிக்கப்படாமையால் வீதி கழுவிச் செல்கின்றமை அவதானிக்கப்பட்டது. அவ்வாறே இந்த வடிகால் கட்டமைப்பு மக்களின் எதிர்ப்பின் காரணமாக மூடப்பட்ட ஒரு வடிகாலுக்காக செலவிடப்பட்ட ரூபா 608,825 தொகையான செலவினம் விளைவற்ற செலவினமாகியிருந்தது.

(ஐ) 2017 ஆம் ஆண்டின் போது கிராம சக்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பன்னல வடக்கு சிறு மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழிலாளர்களின் சங்கத்திற்கு வழங்கப்பட்ட ரூபா 222,750 தொகை பெறுமதியான உபகரணங்கள் தனியார் இடமொன்றில் குறைப்பயன்பாட்டுடன் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

(ஒ) தெஹிஓவிட்ட தெரணியகல ஊடாக நூரிய பெருந் தெருவுக்கு பாதுகாப்பினை வழங்குவதற்காக பாதுகாப்பு சுவர்களை நிர்மாணிப்பதற்காக செய் வேலைப் பெறுமதியாக ரூபா 6,635,776 தொகையான பணம் செலுத்தப்பட்டிருந்தது. எனினும் செயற்திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட அத்தியாவசிய பாதுகாப்பு சுவரை நிர்மாணிக்காமை மற்றும் நிர்மாணிக்கப்பட்ட பாதுகாப்புச் சுவர் உரிய முறையில் மண் நிரப்பப்பட்டு பூர்த்தி செய்யப்பட்டிராமையால் இந்த செயற்திட்டத்திலிருந்து எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் நிறைவேறியிருக்கவில்லை.

(ஓ) இடர்கள் முகாமைத்துவ அமைச்சின் இயற்கை அனர்த்தங்களை குறைக்கும் செயற்திட்டத்தின் கீழ் பிரதேச செயலக அதிகாரப் பிரதேசங்கள் 2 இல் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்த மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 1,345,000 தொகையான 04 செயற்திட்டங்கள் உரிய நியமத்துடன் நிறைவேற்றப்படாமை, செயற்திட்டம் இடைநடுவில் நிறுத்தப்பட்டமை, பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமை போன்ற காரணங்களால் செயற்திட்டங்களுக்கு செலவிடப்பட்ட பணம் விளைவற்றுப் போயிருந்தது.

## 2.6 கடமைப் பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்காக பாராளுமன்றத்தால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டை பயன்படுத்துதல்

2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த 05 ஆண்டுகள் காலத்தில் மாவட்ட செயலகத்திற்கு வழங்கப்பட்டுள்ள நிதி ஏற்பாடு, பயன்பாடு, சேமிப்பு என்பன தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| ஆண்டு | செலவு வகை | தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|---|
| | | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| **2013** | மீண்டுவருபவை | 645.04 | 644.98 | 0.06 | - |
| | மூலதனம் | 100.90 | 93.24 | 7.66 | 7.59 |
| | **மொத்தம்** | 745.94 | 738.22 | 7.72 | 1.03 |
| **2014** | மீண்டுவருபவை | 518.02 | 506.79 | 11.23 | 2.17 |
| | மூலதனம் | 69.95 | 43.99 | 25.96 | 37.11 |
| | **மொத்தம்** | 587.97 | 550.78 | 37.19 | 6.32 |
| **2015** | மீண்டுவருபவை | 607.00 | 600.29 | 6.71 | 1.10 |
| | மூலதனம் | 100.00 | 29.22 | 70.78 | 70.78 |
| | **மொத்தம்** | 707.00 | 629.51 | 77.49 | 10.96 |
| **2016** | மீண்டுவருபவை | 636.00 | 624.35 | 11.65 | 1.83 |
| | மூலதனம் | 196.00 | 155.47 | 40.53 | 20.67 |
| | **மொத்தம்** | 832.00 | 779.82 | 52.18 | 6.27 |
| **2017** | மீண்டுவருபவை | 619.83 | 617.00 | 2.83 | 0.45 |
| | மூலதனம் | 524.89 | 119.01 | 405.88 | 77.32 |
| | **மொத்தம்** | 1,144.72 | 736.01 | 408.71 | 35.70 |

**(அ) பாதீட்டு மதிப்பீடுகளை தயாரித்தல்**

மாவட்ட செயலகத்திற்குரிய பணிப்பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்காக தேவையான நிதியேற்பாடுகளை ஏற்பாடு செய்வதற்காக தயாரிக்கப்பட்டிருந்த பாதீட்டு மதிப்பீடானது நடைமுறைச் சாத்தியமாக தயாரிக்கப்பட்டிராமையால், பின்வரும் குறைபாடுகள் ஏற்பட்டிருந்தன

(i). பணிகளை நிறைவேற்றுவதற்கு உத்தேசித்த காலவரிசை பற்றி கவனம் செலுத்தாது நிதியேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருத்தல்

மாவட்ட செயலகத்தினால் வழங்கல், பராமரிப்பு, சேவைப்படுத்தல், புனரமைப்பு மற்றும் மூலதன சொத்துக்களின் அபிவிருத்தி மற்றும் மூலதனச் சொத்துக்களை சுவீகரித்தல் போன்ற பணிகளை நிறைவேற்றுவதற்காக மொத்தக் கிரய மதிப்பீட்டிற்கமைய தேவையான மொத்த நிதியேற்பாடும் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதியளவில் சாத்தியவளக் கற்கைகள் மற்றும் பெறுகை நடைமுறைக்குரிய பணிகளை நிறைவேற்றியதன் பின்னர் முழு நிதியேட்பாட்டையும் பயன்படுத்த முடியாது போனமையால் ஏற்பாடு செய்யப்பட்ட மொத்த நிதியேற்பாட்டில் ரூபா 408.71 மில்லியன் அல்லது 35.7 சதவீதமான நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது.

(ii). திட்டமிடப்பட்ட பணிகள் வேறு நிறுவனங்களால் நிறைவேற்றப்படுதல்

ருவன்வெல்ல பிரதேச செயலகப் பிரிவின் கோனகல சந்தியிலிருந்து மாப்பிட்டிகம வீதியை அபிவிருத்தி செய்யும் பணிக்காக ரூபா 3.8 மில்லியன் நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், ஒரு பகுதி வீதி அபிவிருத்தி அதிகாரசபையால் நிறைவேற்றப்பட்மையால் அதற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மொத்த நிதியேற்பாட்டின் ரூபா 2.69 மில்லியன் சேமிக்கப்பட்டிருந்தது.

**(ஆ) ஒதுக்கீட்டு கணக்கு**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(i). ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிதியேற்பாடு பயன்படுத்தப்படாமை**

- வரக்காபொல பிரதேச செயலக கட்டிடத்தின் நிர்மாணப் பணிகள் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக நிறைவு செய்யப்பட வேண்டிய போதிலும், 2018 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரையிலும் நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை.

- மீளாய்வாண்டினுள் நிர்மாணிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்த ரூபா 140 மில்லியனான தெஹிஹோவிட்ட எஹலியகொட வீதி, வரக்காபொல ருவன்வெல்ல வீதி மற்றும் நெலும்தெனிய துங்தொட கலபிட்டமட வீதி ஆகிய 3 வீதி அபிவிருத்தி செயற்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**(ii). ஏனைய அமைச்சுகள் மற்றும் திணைக்களங்களால் வழங்கப்பட்ட நிதியேற்பாட்டினை பயன்படுத்தல்**

- ஏனைய 29 அமைச்சுகள், 19 திணைக்களங்களால் பல்வேறு பணிகளுக்காக முறையே ரூபா 3,620.15 மில்லியன், ரூபா 126.87 மில்லியன் எனுமாறு ரூபா 3,747.02 மில்லியன் கூட்டுத்தொகையான நிதியேற்பாடு வழங்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதியளவில் அவற்றுள் ரூபா 3,127.2 மில்லியன் கூட்டுத்தொகை மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கமைய வழங்கப்பட்டிருந்த நிதியேற்பாடுகளில் ரூபா 619.82 மில்லியன் அல்லது 16.54 சதவீதமான நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போது வேறு 10 அமைச்சுகளின் மற்றும் 05 திணைக்களங்களின் 22 செலவின விடயங்களுக்காக வழங்கப்பட்ட நிதியேற்பாடுகளில் கட்டுநிதி வழங்கப்படாமையின் அடிப்படையில் 14 சதவீதம் முதல் 100 சதவீதத்திற்கு இடைப்பட்ட அளவிலான நிதியேற்பாடு ஆண்டின் இறுதியளவில் சேமிக்கப்பட்டிருந்தது.

- தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சின் கிராமிய உடகட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ரம்புக்கன பிரதேச செயலகப் பிரிவின் ஹல்பிட்டிய மாஒய வெலமெத வீதியின் இரு புறமும் உள்ள குடும்பங்களுக்கு குழாய் நீர் வழங்குவதற்காக மீளாய்வாண்டினுள் ரூபா 494,722 தொகை 2017 திசெம்பர் 16 ஆந் திகதி தேசிய நீர் வளங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைக்கு செலுத்தப்பட்டிருந்த போதிலும், 2018 ஆகஸ்ட் மாதம் வரையிலும் அந்த நிகழ்ச்சித்திட்டங்களின் பணிகளேனும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**2.7 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக்கணக்கு**

**பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

மாவட்ட செயலகத்திற்குரிய 27901 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பாக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே தரப்படுகின்றன.

| **செலவு** | | **பெறுவனவுகள்** | | **வரவு மீதி** | |
|---|---|---|---|---|---|
| **உச்ச எல்லை** | **உள்ளபடியானவை** | **ஆகக் குறைந்த எல்லை** | **உள்ளபடியானவை** | **உச்ச எல்லை** | **உள்ளபடியானவை** |
| **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** |
| 50.00 | 49.94 | 38.00 | 40.64 | 150.00 | 143.99 |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**நிலுவைக் கடன் மீதிகள் அறவிடப்படாமை**

கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக்கூற்றின் பிரகாரம், அத்திகதியில் அறவீடு நிலுவையாகக் காணப்பட்ட மீதிகளின் மொத்த தொகையானது இடமாற்றம் பெற்றுச் சென்ற உத்தியோகத்தர்களின் கடன் மீதிகளைத் தவிர்த்து ரூபா 451,775 ஆக இருந்ததுடன், அந்த மீதிகள் 03 மாதங்கள் முதல் 4 ஆண்டுகள் வரையான காலப்பகுதியாக நிலுவையாக முன்கொண்டுவரப்பட்டிருந்த போதிலும், அந்த நிலுவைக் கடன் மீதிகளை அறவிடுவதற்கு மாவட்ட செயலகம் தவறியிருந்தது.

## 2.8 கட்டுநிதிக் கணக்கு

மாவட்ட செயலகத்தினால் பேணப்பட்டிருந்த கட்டுநிதிக் கணக்கு தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்காக மாவட்டச் செயலகத்தினால் தயாரிக்கப்பட்டிருந்த கட்டுநிதி மதிப்பீட்டிற்கமைய மாதாந்தம் பெற்றுக்கொள்வதற்கு எதிர்பார்த்துள்ள கட்டுநிதிகள், மாதாந்தம் கோரிய கட்டுநிதி மற்றும் கிடைத்த கட்டுநிதி தொடடர்பான விபரங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

| **மாதம்** | **திட்டமிடப்பட்டவாறு கோரப்பட்ட கட்டுநிதி** | **கோரிய கட்டுநிதி** | **கிடைக்கப்பெற்ற கட்டுநிதி** | **திட்டமிடப்பட்டவாறு கோரிய கட்டுநிதிக்கிடையிலான வேறுபாடு** | **கோரிய கட்டுநிதி மற்றும் கிடைத்த கட்டுநிதிக்கு இடையேயான வேறுபாடு** |
|---|---|---|---|---|---|
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| சனவரி | 83.12 | 131.00 | 178.39 | 47.88 | 47.39 |
| பெப்ரவரி | 82.95 | 158.95 | 362.33 | 76.00 | 203.38 |
| மார்ச் | 82.95 | 476.11 | 215.38 | 393.16 | 260.73 |
| ஏப்ரல் | 87.40 | 476.11 | 150.09 | 388.71 | 326.02 |
| மே | 83.90 | 851.11 | 564.66 | 767.21 | 286.45 |
| யூன் | 100.40 | 1.008.47 | 429.49 | 908.07 | 578.98 |
| யூலை | 80.40 | 546.11 | 169.61 | 465.71 | 376.50 |
| ஆகஸ்ட் | 81.40 | 674.11 | 374.45 | 592.71 | 299.66 |
| செப்தம்பர் | 100.47 | 836.11 | 244.80 | 735.64 | 591.31 |
| ஒக்தோபர் | 99.60 | 1,263.11 | 529.09 | 1,163.51 | 734.02 |
| நவம்பர் | 100.17 | 1,263.11 | 603.49 | 1,162.94 | 659.62 |
| திசெம்பர் | 114.05 | 1,253.11 | 634.41 | 1,139.06 | 618.70 |
| மொத்தம் | 1,096.81 | 8,937.41 | 4,456.19 | 7,840.60 | 4,481.22 |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i). திட்டமிடப்பட்டவாறு உரிய காலப்பகுதிகளில் உரிய பணிகளை நிறைவு செய்யாது அந்த பணகளை ஆண்டின் இறுதியில் நிறைவேற்றுவதற்கு எத்தனித்தமையால் தேவையான கட்டுநிதிகளை திறைசேரியால் வழங்கப்படாமையின் காரணத்தால்

மாவட்ட செயலகத்தினால் ஏனைய அமைச்சுகள் மற்றும் திணைக்களங்கள் 15 இற்காக 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான ரூபா 479,661,141 கூட்டுத்தொகையான பட்டியல்களை செலுத்தவேண்டியதாக இருந்தது.

(ii). கட்டுநிதி மதிப்பீட்டினை தயாரிக்கும் போது ஏனைய அமைச்சுகள் மற்றும் திணைக்களங்களிலிருந்து பெற வேண்டிய நிதியேற்பாடுகளை கருத்திற் கொண்ணாமையால் திட்டமிடப்பட்டவாறும் கோரிய கட்டுநிதி ஆகியவற்றுக்கிடையே கருத்திற்கொள்ளக்கூடிய அளவிலான வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(iii). 2015 யூலை 14 ஆந் திகதிய 03/2015 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையில் திருத்தப்பட்ட நிதிப்பிரமாணம் 371(5) இன் பிரகாரம் செயற்பாடு நிறைவடைந்து 10 நாட்களினுள் பெற்றுக்கொண்ட செயல்நிமித்த உப கட்டுநிதி தீர்க்கப்பட வேண்டிய போதிலும், 16 சந்தர்ப்பங்களுக்குரியதாக பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த ரூபா 567,274 கூட்டுத்தொகையான செயல்நிமித்த உப கட்டுநிதி செயற்பாடு நிறைவடைந்து 10 நாட்கள் முதல் 05 மாதங்கள் வரையான கால தாமதத்தின் பின்னர் அந்த கட்டுநிதி தீர்க்கப்பட்டிருந்தது.

## 2.9 பொது வைப்புக் கணக்குகள்

மாவட்ட செயலகத்தின் கீழுள்ள 04 பொது வைப்புக் கணக்குகளின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதிகளின் கூட்டு மொத்தம் ரூபா 508.13 மில்லியனாகும். 02 ஆண்டுகளை மிகைத்த ரூபா 174,867,168 தொகையான மில்லியன் 02 வைப்புக் கணக்குகள் சம்பந்தமாக நிதிப் பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.10 இணக்கமின்மைகள்

### சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

2014 நவம்பர் 13, 2015 யூலை 07 மற்றும் 2016 சனவரி 06 ஆந் திகதிய முறையே BD/GPS/130/9/ 14/MC-1, BD/GPS/130/9/14/MC-II மற்றும் BD/GPS/130/9/14/MC-III ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கைக்கமைய தொடர்புடைய சுற்றறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு மோட்டார் சைக்கிள்களை பெற்றுக்கொண்ட கள உத்தியோகத்தர் ஒருவர் மோட்டார் சைக்கிள் உரித்தற்ற பதவியொன்றிற்கு இடமாற்றம் பெறல், சேவையிலிருந்து நீங்குதல் மற்றும் சேவை வறிதாக்கப்படல் போன்ற சந்தர்ப்பங்களில் மோட்டார் சைக்கிளின் சந்தைப் பெறுமதியை செலுத்த வேண்டிய போதிலும், கேகாலை மாவட்டச் செயலகத்தினூடாக வழங்கப்பட்ட மோட்டார் சைக்கிள் உரிமையாளர்களிடையே ஏனைய பதவியொன்றிற்கு இடமாற்றம் பெற்ற மற்றும் சேவை வறிதாக்கப்பட்ட 15 உத்தியோகத்தர்கள் தொடர்பில் அவற்றின் சந்தைப் பெறுமதியான ரூபா 2,083,760 தொகையான பணம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

## 2.11 மனிதவள முகாமைத்துவம்

### அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர், உள்ளபடியான பதவியணியினர் மற்றும் ஆளணி வேதனங்களுக்கான செலவு

மேலே 2.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட கடமைகளை நிறைவேற்றுவதற்காக 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான அங்கீகரிக்கப்பட்ட உள்ளபடியான வெற்றிடமான மற்றும் மிகையான பதவியணியினர் தொடர்பான விபரம் கீழே தரப்பட்டுகின்றன. மீளாய்வாண்டிற்காக மாவட்ட செயலகத்தால் ஆளணி வேதன செலவுத் தொகுதி தொடர்பாக ரூபா 548.74 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்தது. அதற்கிணங்க ஒரு நபருக்கான செலவு ரூபா 297,098 ஆக இருந்தது.

| ஆளணி வகை | | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
| --- | --- | --- | --- | --- |
| (i) | சிரேஷ்ட மட்டம் | 69 | 64 | 05 |
| (ii) | மூன்றாம் மட்டம் | 31 | 18 | 13 |
| (iii) | இரண்டாம் மட்டம் | 1750 | 1663 | 87 |
| (iv) | ஆரம்ப மட்டம் | 115 | 102 | 13 |
| | மொத்தம் | 1965 | 1847 | 118 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**தேவைப்பாட்டினை மிகைத்து பதவியணியை அங்கீகரித்தல்**

மீளாய்வாண்டின் இறுதியளவில் 118 வெற்றிடங்கள் நிலவியதுடன், 2017 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த ஒதுக்கீட்டுக் கணக்கிற்கமைய ஏற்பாடு செய்யப்பட்ட நிதியேற்பாட்டினை பயன்படுத்தாது எஞ்சியிருந்த போதிலும், அந்த சேமிப்புகள் தொடர்பில் பதவியணியிலான வெற்றிடங்கள் தாக்கம் செலுத்தியிருக்கவில்லை. அதற்கமைய அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் மிகை மதிப்பீடொன்று இடம்பெற்றிருந்தமை அவதானிக்கப்பட்டது.